**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (தொழிற்கல்வி)**
**செயல்முறைகள், சென்னை –600006.**

**ந.க.எண்.003775/இ/இ1/2023, நாள் 03.02.2023**

**பொருள்** பள்ளிக் கல்வி – உறுதிமொழி –09.02.2023 – கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு உறுதிமொழி எடுத்தல் – தொடர்பாக.

**பார்வை** சென்னை–06, முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரின் கடித எண். ட்டி2/34784/2022, நாள்.31.01.2023.

*****

(நகல் ) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

இணைப்பு – கடிதம் மற்றும் உறுதிமொழி

03/2/23

**இணை இயக்குநருக்காக (தொழிற்கல்வி)**

03/02/2023

**பெறுநர்**
அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.
(மின்னஞ்சல் வழியாக)

005976

தொழிலாளர் துறை

அனுப்புநர்

முனைவர். அதுல் ஆனந்த், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் /
தொழிலாளர் ஆணையர்,
சென்னை– 6.

பெறுநர்

The Director
Department of School Education
DPI Campus,
Chennai-6.

கடித எண். ட்டி2/34784/2022, நாள்.31.01.2023

ஐயா,

பொருள்: கொத்தடிமைத் தொழிலாளர் – 09.02.2023 அன்று கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு உறுதி மொழி எடுத்தல். – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண். (1டி) 448, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (யு1) துறை நாள். 23.09.2020.
2. அரசு கடித எண்.322/யு1/2023–1 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.20.01.2023.

0 3 FEB 2023
சென்னை – 06
கல்லூரிச்சாலை

*****

பார்வை (1)ல் கண்ட அரசாணையில் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 9ம் நாள் 'கொத்தடிமைத் தொழிலாளர் முறைக்கு எதிர்ப்பு தினமாக அனுசரித்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை (2)ல் கண்ட அரசு கடிதத்தில் 09.02.2023 அன்று காலை 11.00 மணிக்கு கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதிமொழியினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே 09.02.2023 அன்று காலை 11.00 மணிக்கு தங்களது அலுவலகத்தில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதிமொழியினை மேற்கொள்ளுமாறும், அதனை புகைப்படம் எடுத்து அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழியினை இணைத்து அனுப்புகிறேன்.

இணைப்பு. உறுதிமொழி வாசகம்.

31/01/23

முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையருக்காக

<u>இணைப்பு</u>

## <u>கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதி மொழி</u>

"இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மனிதனை வணிகப் பொருளாக்குதலும், வலுக்கட்டாயமாக வேலை சுமத்தும் வழக்கங்களும், கடன் பிணையத் தொகை வழங்கி கட்டாயப் பணிக்கு வற்புறுத்துவதும் தண்டனைக்குரிய குற்றமாக வரையறை செய்யப்பட்டுள்ளதால், கொத்தடிமைத் தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழித்திடும் நோக்கத்தை கருத்திற் கொண்டு, சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், கொத்தடிமைத் தொழிலாளர் முறை எந்தத் தொழிலில் இருந்தாலும் அதனை அடையாளங்கண்டு தக்க நடவடிக்கை எடுக்க முழு முயற்சி செய்வேன் என்றும், எந்தத் தொழிற்சாலையிலும் தொழிலாளர்களுக்கு முன்பணம் கொடுத்து பணியமர்த்துவதைத் தவிர்க்க வலியுறுத்துவேன் என்றும், கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்டு அவர்களின் முழுமையான மறுவாழ்விற்காகப் பணியாற்றுவேன் என்றும், இந்திய அரசமைப்புச் சட்டம் வகை செய்துள்ள அடிப்படை உரிமைகளை அனைவருக்கும் உரித்தாக்குவதற்கு, கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டத்தைச் சீரிய முறையில் செயற்படுத்த உறுதுணையாக இருந்து கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு சிறப்புடன் செயற்படுவேன் என்றும், நான் உளமார உறுதி கூறுகிறேன்".